கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – (2012/2013 Batch) 2015/2016 (யூன் 2018)

# SAS 4123 Applied Research and Report Writing

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து ஏதேனும் மூன்ற வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து ஒரு வினாவிற்கும் விடை தருக.

## பகுதி – I

01. (அ) சமூக ஆய்வாளன் ஒரு ஆய்வு விடயத்தினை தெரிவுசெய்யும்போது கவனிக்க வேண்டிய விடயங்களை பட்டியற்படுத்துக.
(10 புள்ளிகள்)

(ஆ) சமூக விஞ்ஞான ஆய்வுகளில் "மனித சமுதாயம்" ஆய்வுகூடமாகத் தொழிற்படுமாற்றினை தெளிவுபடுத்துக.
(15 புள்ளிகள்)

02. (அ) ஆய்வில் பிரதிநிதித்துவப்படுத்தும் தன்மை (Representativeness) யினை மாதிரித் தெரிவுடன் தொடர்புபடுத்தி விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) 'ஆய்வுக்கும் கோட்பாட்டிற்கும் இருபக்கத் தொடர்பு காணப்படுகின்றது" தெளிவுபடுத்துக.
(15 புள்ளிகள்)

03. (அ) சமூக ஆய்வு பற்றி அறிஞர்கள் குறிப்பிட்டிருக்கக் கூடிய வரைவிலக்கணங்கள் இரண்டினை விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) ஒரு கிராமத்தினை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான தேவைக் கணிப்பீட்டு முறை பற்றியும் அதிலுள்ள நன்மை தீமைகளைப் பற்றியும் தெளிவுபடுத்துக.
(15 புள்ளிகள்)

04. (அ) 'ஆய்வில் உறுதிப்படுத்தல் அவசியமாகும்' இதன் வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) "மாறிகளைப் பரிசோதிப்பதே ஆய்வு" நீா் ஒரு சமூக ஆய்வாளராக உம்மைக் கருத்திற்கொண்டு சமூகப்பிரச்சினை ஒன்றினை எடுத்துக்காட்டாகக் கொண்டு மாறிகள் தொடர்பாக தெளிவுபடுத்துக.
(15 புள்ளிகள்)

## பகுதி – II

01. "பல்கலைக்கழக மாணவர்கள் கற்கை நடவடிக்கைகளில் காட்டும் ஆர்வம் குறித்து ஒரு ஆய்வை நடாத்துவதற்கு சமூகவியல் சிறப்புக் கற்கை மாணவர்கள் தயாராகுகின்றனர்." இதனைக் கருத்திற்கொண்டு, ஆய்வுப் பிரச்சினை, ஆய்வுக் கருதுகோள், ஆய்வுக்கான முறைமையியல், தரவு திரட்டுவதற்கான முறைகள், மாதிரிமுறைகள், தரவுப் பகுப்பாய்வு என்பனவற்றை உள்ளடக்கியதான ஒரு ஆய்வு முன்மொழிவினை தயாரிக்குக.

(25 புள்ளிகள்)

02. தரவுப் பகுப்பாய்வின் உள்ளடக்கங்கள், படிமுறைகள் என்பனவற்றைக் குறிப்பிட்டு எடுத்துக்காட்டுகளின் துணையுடன் இதன் முக்கியத்துவம் குறித்த உமது நிலைப்பாட்டினை சமூக விஞ்ஞான அடிப்படையில் நியாயப்படுத்துக.

(25 புள்ளிகள்)

*****